
# அறிவு

மலர் - 03　　25-01-2005　　இதழ் 01



27 April 2005

25/=

# அறிவு

# 2005

சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை
ஸ்தாபித - வெளியீடு

# அறிவு

**"ARIVU" - KNOWLEDGE**

சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை ஸ்தாபித - வெளியீடு

41, கல்ஹரி வீதி, திருக்கோணமலை.

Sandrasegarampillai Gnanambigai Establishment

*41, College Street, Trincomalee*

## பொருளடக்கம்


மீண்டும் அறிவு மலர்கிறது

அறிவு ஆசிச் செய்தி - 1988

அறிவு ஆசிச் செய்தி - 2000

அறிவு ஆசிச் செய்தி - 2005

வாழ்வது எப்படி - ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா

சுனாமி ஆழிப்பேரலை

படம் - ஆசியப் பேரழிவு

கவிதை - வைரமுத்து

இலங்கையில் சுனாமியின் பாதிப்பு

பாரிய பூகம்பங்கள்

சுற்றுச்சூழல்

குப்பைகள் அழிய எவ்வளவு காலமாகும்

பொருள்களை மீண்டும் பயன்படுத்த

பிளாஸ்டிக் பை

சமாதான நோபல் பரிசு

88 வயதுச் சீமாட்டியின் எண்ணச் சிதறல்


அமெரிக்கப் பயணம்

தியானம் என்பது நிகழ்காலத்தில்

வயதில்லா உடலும் காலமில்லா மனமும்

31வது ஆண்டுவிழா

எண்ணக்குவியல்

எமது ஸ்தாபித காரணகர்த்தாக்கள்

**திரு.திருமதி. சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை**

அவர்கட்கு இந்த அறிவு - 2005

இதழை சமர்ப்பிக்கிறோம்





## மீண்டும் "அறிவு" மலர்கிறது

குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் மலரும்.

எமது அறிவு சித்திரை 1988ம் ஆண்டு அச்சில் மலர்ந்தது. பின்னர் 2000ம் ஆண்டு ஜுன் 21இல் மலர்ந்தது. அந்தச் சுற்று அதன் மூன்றாவது இதழ் 2001 ஜனவரியில் வெளிவந்ததும் நின்றது. இப்போது 25-01-2005ல் மீண்டும் மலர்கிறது.


'சந்திர - ஞானம்' என புதுப்பெயரில் மறு ஜென்மம் எடுக்க இருந்த 'அறிவு' மீண்டும் அதனது சென்ற பிறப்பு பெயரோடு வெளிவர திருஅருள் பாலித்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இதனை மாதந்தோறும் கொண்டுவரும் எண்ணம் எமக்குண்டு.

**ஆசிரியர் குழு**
**திருக்கோணமலை.**

25-01-2005.

**2005 புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.**



**- அறிவு**




**சிவயோக சமாஜம்**
**68, பிரதான வீதி,**
**திருக்கோணமலை**


ஞானாம்பிகை ஸ்தாபனத்தினரால் திரு. ஜெ. ஜெயமயூரகன் ஆசிரியராக நடத்தப்படும் “அறிவு” என்னும் இப்பத்திரிகை வாசகர்களுடைய பகுத்தறிவு சக்தியை வளர்த்து சமுதாயத்திற்கு நற் சிந்தனையையும் நற்செயலையும் வளர்ப்பதற்கு இப்பத்திரிகை உபகரிப்பதற்கு திருவருள் பாலிப்பதாக.

**சுவாமி கெங்காதரானந்தா**

**(1988ம் ஆண்டு மலர் 01, இதழ் 01 இற்கு வழங்கிய ஆசியுரை)**

---

# ஆசியுரை

“அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்” என்ற ஆப்த மொழிகளுக்கு இணங்க “அறிவு” என்னும் சஞ்சிகை பிள்ளைகளால் அருமை பெற்றோர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதை பார்த்து பெரும் மகிழ்ச்சி அடைந்தேன். அறிவு இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று பள்ளிக்கூடங்களில் படிக்கும் உலக அறிவு மிகவும் முக்கியமானது. அது உலகில் சீரும் சிறப்புடனும் வாழ்வதற்கு தேவையானது. அதனிலும் சிறந்தது ஞானம். அனுபவ ஞானம் எங்களின் பிறந்த பயனை அடைவதற்கு திறவுகோல் ஆகும். இரு அறிவும் அடைவதற்கு “அறிவு” சஞ்சிகை ஆற்றும் சிறந்த தொண்டு போற்றுதற்குரியது. தாயாரின் பெயர் ஞானாம்பிகை என்ன பொருத்தம்! “அறிவு” பல்லாண்டுகள் சிறந்த தொண்டை ஆற்றுவதாக. இலங்கையிலும் தமிழ் பேசும் நல் உலகமெல்லாம் இச் சஞ்சிகை செல்வதாக என பிரார்த்திக்கிறேன்.

சுவாமி பிரகாசமயானந்தா

**(2000ம் ஆண்டு ஜுன் 21இல் வெளிவந்த அறிவிலிருந்து)**



உ

# ஆசியுரை

திருக்கோணமலையில் சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை ஸ்தாபிதம் 31 வருடங்களாக நடைபெற்று வருகிறது. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் ஒரு சங்கமாகக்கூடி குடும்ப நலன்களையும் தேச நலன்களையும் பேணிக்காத்து வருகிறார்கள். வயதில் மூத்தவர்களின் புத்திமதிகளை வயதில் குறைந்தவர்கள் கேட்டு நடப்பதால் குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்குவதில்லை. மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்.

குடும்ப அங்கத்தவர்களுக்கும் அவர்களோடு பழகியவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் அறிவு என்னும் பத்திரிகையை காலத்துக்குக் காலம் வெளியிட்டு வருகிறார்கள். அதில் பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் வேண்டிய அறிவுரைகள் வரலாறுகள் வாழ்க்கையில் திருந்தி நடப்பதற்கான கட்டுரைகள் வெளியாகும்.

அறிவுடையார் எல்லாம் உடையார். நல்ல புத்தகங்களைப் படிப்பதன்மூலமும் நல்ல பிரசங்கங்களைக் கேட்பதன்மூலமும் பெரியார்களுடன் பழகுவதன் மூலமும்தான் ஒருவரால் அறிவாளியாக வரமுடியும். வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்.

அறிவு என்னும் பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சி அடைந்து மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்றும் சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை ஸ்தாபிதம் நாட்டு மக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

ஆனந்தம்

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்


முத்துக்குமாரசுவாமி கோவிலடி,
திருக்கோணமலை,

25.01.05.

## குரு திருவடிக்கு ஒரு பாட்டு

குரு திருவடிக்கு ஒரு பாட்டு
உன் மனதினில் நீயே உருவாக்கு
(குரு திரு)

அருள் ஒளிமுகம் அகிலத்தை அணைத்திடும் கரமும்
ஓங்கிய ஞானம் புகழ்கின்ற கண்ணும் உன்மனதிலே
தோன்றிடும்
(குருதிரு)

கர்ம வினைகளை களைகின்ற விதத்தை
கற்றே தருவார் நேரிலே நின்று
சிறப்புடன் அவர் பாதம் வணங்கியே ஏத்து
ஒளியுள்ள பாதையில் நடத்தி செல்வாரே
(குரு திரு)

தான தர்மங்களை செய்திடுவீர் அதை மற்றையோர்
அறியா வழியினில் செய்வீர்
வலக்கரம் கொடுப்பது இடக்கரம் அறியா என்றே
நம் குரு புகன்று சென்றாரே
(குரு திரு)

பெயர் விளம்பரம் வேண்டவே வேண்டாம்
மேதினியில் அது கிடைத்து விட்டால் ஞாலத்தில்
உன்னை புகழ்ந்திடுவார் பலர்
அதனால் உனக்கு தீங்குகள் தானே
(குரு திரு)

**எழுதியவர்**
**ஞானம்**



# வாழ்வதெப்படி?

-ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா-

நன்மையும் தீமையும் நம்மைக் கைவிடுகின்றனவா? நன்மைக்கும் தீமைக்கும் பின், அனைத்தையும் கடந்து நிற்கும் உங்களுடைய சுய சொருபத்தை நீங்கள் அறிய வேண்டும். அறிந்தபின் உங்கள் பார்வையில் அனைத்தும் நல்லதாகவே தோன்றும்; தீர்வு காணமுடியாத வாழ்க்கைப் பிரச்சினைகள் அறவே நீங்கும். துயரம் தீர்ந்த சுக அனுபவம் ஒவ்வொரு நிமிடத்திலும் அனுபவ மாத்திரமாய் நிறைந்து நிற்கும்.

வாழ்க்கை என்பது ஒரு கடினமான போராட்டமாக, பிரச்சனைகளால் நெருக்குண்டு இருப்பது என்பதில் சந்தேகமில்லை. தைரியமுடன் அதனைக் கடந்து செல்ல வேண்டும். கடந்து செல்லக்கூடிய அற்புதமான சக்தி, உங்களுடைய ஹ்ருதயத்தில் இருக்கின்றது. அந்த ஆத்ம சக்தியை உபயோகப்படுத்தி, சகலவிதமான இன்ப துன்பங்களையும் ஒதுக்கி மேலே செல்லுங்கள்!

இது ஒவ்வொரு மனிதனாலும் சாதிக்கக் கூடியது; அனுபவத்திற்குக் கொண்டு வரக்கூடியது. அடிக்கடி கூறிக்கொண்டிருக்கும் 'விதி' என்பதற்கு நீங்கள்தான் கர்த்தா. உங்களால் படைக்கப்பட்ட நன்மை தீமைகளிலிருந்து, நீங்களாகவே விடுதலை அடைய வேண்டும். ஜீவ சக்தியும், பரமாத்த சக்தியும் ஐக்கியப்படும்பொழுது, அது தானாகவே நிகழக்கூடியது.

மனம், புத்தி, சரீரம் இம்மூன்றையும் தம்வசப்படுத்தி, பிரபஞ்ச நியதி நியமங்களுக்கு அப்பாற் செல்ல வேண்டும். இதற்காகத் தனித்திருக்க வேண்டுமென்பதில்லை. அன்றாடக் கடமைகளை தார்மீக நெறியிற் செயற்படுத்தினால், நாளடைவில் ஹ்ருதயசுத்தி கிடைக்கும். அழுக்கற்ற கண்ணடியில் தனது முகம் தெளிந்து காணப்படுவதுபோல், மாசற்ற ஹ்ருதயத்தில் தன்னைத் தான் காணமுடியும்.

உன்னுடைய எதிர்காலத்தை நிச்சயிப்பது நீ! பழ வினைகளிலிருந்து விமுக்தனாகும் ஆத்ம சக்தி உன்னிடமிருக்கிறது. அந்தச் சக்திதான் நீ! நீரோட்டத்தைக் கிழித்துச் செல்லும் வுள்ளம்போன்று, தன்னறிவால் வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கிழித்தெறிந்து முன்செல்வாய்! உன்னை ஓர் ஆத்மீக வீரனாக மாற்றுக! வேற்றுமைகளும் துன்பங்களும் நிறைந்த ஒன்றை, எல்லாவற்றிலும் எப்பொழுதும் காண முயற்சிக்க வேண்டும். அதுதான் வாழும் வாழக்கை.

நன்றி - சித்த சோதனை

## சுனாமி - ஆழிப்பேரலை

சுனாமி - (TSUNAMI) ஆழிப்பேரலை இலங்கையை சென்ற ஆண்டு 26ந் திகதி டிசம்பரில் தாக்கியது. இச்செய்தியை அன்று காலை பத்துமணிக்கு எமது உறவினரின் மகளின் பூப்புநீராட்டு விழாக் கொண்டாட்டத்திற்கு கொழும்பில் காலிமுகத்திடல் ஹோட்டலுக்குச் சென்ற சமயம் தான் முதலில் அறிந்தேன். எமது வாகனச் சாரதிக்கு வந்த தொலைபேசி அழைப்பில் திருமலைக் கடல் பொங்கி பத்தாம் குறிச்சியும் தீர்த்தக்கரையில் வசிக்கும் சிங்களவர்களும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்கள்.

இதை உறுதிசெய்யும்பொருட்டு அங்கிருந்த உறவினர்களிடம் வினவினேன் உதயன் - வித்தியதரன் தனது கையடக்கத் தொலைபேசியை எனக்குத் தந்தார். திருக்கோணமலையில் எனது கிளினிக்கை அழைத்துக் கேட்டபோது அது உண்மையென்றும் பிரதான வீதியால் சிங்களச் சனம் குழந்தை குட்டிகளோடு அலறிக்கொண்டு போவதாகக் கூறினார்கள். சிறிது நேரத்தில் சாய்ந்தமருது கல்முனையில் கடல்கொந்தளித்து 50, 60 பேர் இறந்துவிட்ட செய்தி வந்தது.

அன்று இரவே திருக்கோணமலை திரும்பி நகர்ப்புறத்தைச் சுற்றிப் பார்த்தேன். முற்றவெளியிலும் கடலோர வீதியிலும் பல படகுகள் தூக்கி வீசப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. உள்முகத்துறைவீதியில் பல கட்டிடங்களின் மதில் சுவர்கள் இடிந்து விழுந்ததைக் கண்டேன். இறந்தோர் விபரம் எவரும் சரியாகக் கூறவில்லை. சிங்களக் கொரியாப் பகுதியில் இரண்டு குழந்தைகளும் பத்தாம் குறிச்சியில் இரு சிறுவர்களும் உவர்மலைப் பகுதியில் இரு சிறுவர்உட்பட பலர் இறந்துவிட்டதாகச் செய்தி சொன்னார்கள்.

இன்றைய (25-01-05) கணக்குப்படி இலங்கையில் இறந்தோர் தொகை முப்பதாயிரத்தைத் தாண்டிவிட்டது. சுமார் ஐயாயிரம்பேர் காணாமல் போயுள்ளனர். உண்மையான புள்ளிவிபரங்கள் இன்னும் சரியாகத் தெரியவில்லை.

உலகளாவிய ரீதியில் இரண்டுலட்சம் பேரைக் காவுகொண்டுவிட்ட இந்த ஆழிப்பேரலை இந்நூற்றாண்டின் பேரனர்த்தம் விளைந்த நிகழ்வாக அமையலாம்.






ஏ கடலே
உன் கரையில் இதுவரையில்
கிளிஞ்சல்கள்தானே சேகரித்தோம்
முதல் முதலாய்
பிணங்கள் பொறுக்குகிறோம்
ஏ கடலே
நீ முத்துக்களில் பள்ளத்தாக்கா!
முதுமக்கள் தாழியா?
நீ கலங்களின் மைதானமா?
பிணங்களின் மயானமா?
துக்கத்தை எங்களுக்கும் தந்துவிட்டு
நீ ஏன் கறுப்பை அணிந்திருக்கிறாய்?
உன் அலை
எத்தனை விதவைகளின் வெள்ளைச் சேலை
நீ தேவதை இல்லையா
பழிவாங்கும் பிசாசா
உன் மீன்களை நாங்கள்
கூறுகட்டியதற்கா
எங்கள் பிணங்களை நீ
கூறுகட்டுகிறாய்?
நீ அனுப்பியது
சுனாமி அல்ல
பிரளயத்தின் பினாமி
பேய்ப்பசி உன்பசி
குமரிக்கண்டம் கொண்டாய்
கபாடபுரம் தின்றாய்
பூம்புகார் உண்டாய்
தேதாதென்று
உன்டினோசர் அலைகளை அனுப்பி
எங்கள்
பிஞ்சுக் குழந்தைகளின்
பிள்ளைக்கறி கேட்கிறாய்
அடக்கம் செய்ய ஆளிராதென்றா
புதை மணலுக்குள்
புதைத்து விட்டே போய்விட்டாய்?
என்ன பிழை செய்தோம்
ஏன் எம்மைப் பலிகொண்டாய்?

சுமத்ராவை வென்றான்
சோழமன்னன் ராஜராஜன்
அந்தப் பழிதீர்க்கவா
சுமாத்ராவிலிருந்து சுனாமி அனுப்பிச்
சோழநாடு கொண்டாய்
காணும் கரைதோறும்
கட்டுமரங்கள் காணோம்
குழவிகளும் காணோம்
கிழவிகளும் காணோம்
தேசப்படத்திலே சில கிராமங்கள் காணோம்
பிணங்களை அடையாளம் காட்ட
பெற்றவளைத் தேடினோம்
அவள்
பிணத்தைக் காணோம்
மரணத்தின் மீதே
மரியாதை போய்விட்டது
பறவைகள்
மொத்தமாய் வந்தால் அழகு
மரணம்
தனியே வந்தால் அழகு
மொத்தமாய் வரும் மரணத்தின் மீது
சுத்தமாய் மரியாதையில்லை
அழுதது போதும்
எழுவோம்
அந்த
மொத்த பிணக்குழியில்
நம் கண்ணீரையும் புதைத்துவிடுவோம்
இயற்கையின் சவாலில்
அழிவுண்டால் விலங்கு
இயற்கையின் சவாலை
எதிர்கொண்டால் மனிதன்
நாம் மனிதர்கள்
எதிர்கொள்வோம்
மீண்டும் கடலே
மீன்பிடிக்க வருவோம்
ஆனால்
உனக்குள் அஸ்திக்கரைக்க
ஒருபோதும் வரமாட்டோம்.

# இலங்கையில் சுனாமியின் பாதிப்பு

(நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையத்தின் 24ஆம் திகதி வரையான மதிப்பீட்டின் படி)


| மாகாணம் | மாவட்டம் | பாதிக்கப்பட்ட குடும்பங்கள் | இடம்பெயர்ந்த குடும்பங்கள் | இடம்பெயர்ந்த நபர்கள் | | | இறப்பு | காயம் அடைந்தோர் | காணாமல்போனோர் | சேதமடைந்த வீடுகள் | | நிவாரண நிலையங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | [illegible] | உறவினர், நண்பர் வீடுகளில் | மொத்தம் | | | | முழுமையாக | பகுதியாக | |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 13,652 | 12,631 | 11,891 | 28,016 | 39,907 | 2,640 | 1,647 | 540 | 6,084 | 1,114 | - |
| | கிளிநொச்சி | 2,295 | 318 | 305 | 1,298 | 1,603 | 560 | 607 | 1 | 1,250 | 4,250 | 2 |
| | முல்லைத்தீவு | - | 6,007 | 11,903 | 10,564 | 22,657 | 3,000 | 2,590 | 552 | 3,400 | 600 | 23 |
| கிழக்கு | திருகோணமலை | - | 27,746 | 19,559 | 62,084 | 81,643 | 1,078 | - | 337 | 5,974 | 10,394 | 42 |
| | மட்டக்களப்பு | 63,717 | 12,494 | 27,491 | 31,509 | 69,000 | 2,840 | 2,375 | 1,033 | 15,939 | 5,665 | 45 |
| | அம்பாறை | 38,624 | - | 75,492 | - | 75,492 | 10,436 | 120 | 876 | 29,077 | - | 82 |
| தெற்கு | அம்பாந்தோட்டை | 16,994 | 3,334 | 555 | 17,168 | 17,723 | 4,500 | 361 | 963 | 2,303 | 1,744 | 5 |
| | மாத்தறை | 20,675 | 3,288 | 4,067 | 9,254 | 13,321 | 1,342 | 6,652 | 513 | 2,362 | 5,659 | 30 |
| | காலி | 23,174 | 1,472 | 5,135 | - | 6,135 | 4,216 | 313 | 554 | 5,526 | 5,966 | 44 |
| மேற்கு | களுத்துறை | 6,905 | 6,899 | 3,421 | 24,296 | 27,717 | 256 | 400 | 155 | 2,780 | 3,116 | 16 |
| | கொழும்பு | 9,647 | 5,290 | 6,077 | 24,575 | 30,652 | 79 | 64 | 12 | 3,398 | 2,210 | 28 |
| | கம்பஹா | 6,827 | 5,258 | 911 | 20,443 | 21,354 | 6 | 3 | 5 | 292 | 307 | 2 |
| வட மேற்கு | புத்தளம் | 232 | 18 | 66 | - | 66 | 4 | 1 | 3 | 23 | 72 | 2 |
| | மொத்தம் | 202,742 | 84,735 | 166,963 | 229,207 | 396,170 | 30,957 | 15,196 | 5,644 | 78,407 | 41,097 | 321 |

நன்றி - வீரகேசரி.



# ஆசிய நாடுகளில் அழிவுகள்

| நாடுகள் | இறப்பு | காயம் |
|---|---|---|
| இந்தோனேசியா | 173,981 | 100,000 |
| இலங்கை | 30, 967 | 15,256 |
| இந்தியா | 16, 383 | ...... |
| தாய்லாந்து | 5, 322 | 8,457 |
| கிழக்கு ஆபிரிக்கா | 137 | ...... |
| மலேசியா | 74 | 299 |
| மாலைதீவு | 82 | ........ |
| மியன்மார் | 59 | 45 |
| பங்காளாதேஷ் | 2 | ......... |
| ஆபிரிக்க நாடுகள் | 298 | ......... |
| மொத்தம் | 227, 305 | 124,057 |



# பாரிய பூகம்பமும் உயிரிழப்புகளும்

1976 - சீனாவில் தாங்ஸானில் 240, 000 உயிரிழப்பு, ரிக்டர் அளவு 8.2

1990 - ஈரான் 50,000 உயிழப்பு ரிக்டர் 7.7

1939 - துருக்கி 33,000 உயிரிழப்பு ரிக்டர் 7.9

1988 - வடமேல் ஆர்மோனியா 25,000 உயிர்ப்பலி, ரிக்டர் அளவு 6

1978 - ஈரான் 25,000 உயிர்ப்பலி, ரிக்டர் அளவு 7.5

1999 - துருக்கு 17,000

1976 - கௌதமாலா 22,778 உயிரிழப்பு, ரிக்டர் அளவு 7.5

1960 - மொராக்கோ 12,000 உயிர்ப்பலி, ரிக்டர் அளவு .5.7

1993 - லட்டூர் இந்தியா 10,000 உயிர்ப்பலி, ரிக்டர் அளவு 6.0

1995 - ஜப்பான் 6,000 உயிர்ப்பலி, ரிக்டர் அளவு 7.2

1998 - வட ஆப்கானிஸ்தான் 5,000 உயிர்ப்பலி ரிக்டர் அளவு 6.9

2001 - இந்தியா 13000 உயிர்ப்பலி ரிக்டர் அளவு 7.9

2003 - ஈரான் 26,000 உயிர்ப்பலி ரிக்டர் அளவு 6.5

1999 - தாய்வான் 2400 உயிர்ப்பலி

1999 - கொலம்பியா 1,171உயிர்ப்பலி ரிக்டர் அளவு 6.1

1985 - மத்திய மெக்சிக்கோ 9,500 உயிர்ப்பலி ரிக்டர் அளவு 8.1

2005 - வட ஆப்கானிஸ்தான், 1,000 உயிர்ப்பலி

1939 - சிலி 28,000 உயிர்ப்பலி ரிக்டர் அளவு 8.3

1935 - இந்தியா (கொட்டா) 50,000 உயிர்ப்பலி ரிக்டர் அளவு 7.5

## இதுவரை உலகில் பதிவாகியுள்ள பாரிய பூகம்பங்கள்

1952 - ரஷ்யா 9.0 ரிச்டர்
1957 - அலாஸ்கா 9.1 ரிச்டர்
1960 - சிலி 9.5 ரிச்டர்
1964 - அலாஸ்கா 9.2 ரிச்டர்
2004 - இந்தோனேசியா 9.0 ரிச்டர்



# சுற்றுச்சூழல்

நாம் பல விடயங்களைப் பற்றிப் பேசும்போது பிரித்தெடுத்துப் பேசுகிறோம். அதன் பின்னணியை மறந்து விடுகிறோம்.

பேச்சாளர் ஒருவர் வெள்ளைப் பலகையில் மூன்று கறுத்தப் புள்ளிகளைப் போட்டுவிட்டு சபையோரைப் பார்த்து உங்களுக்கு என்ன தெரிகிறது என்று ஒவ்வொருவராகக் கேட்டார். எல்லோரும் "கறுத்தப் புள்ளிகள் தெரிகின்றன" "மூன்று புள்ளிகள் தெரிகின்றன" "மூன்று கறுத்தப் புள்ளிகள் தெரிகின்றன" என்று கூறினார்கள்.

அவர் சபையோரைப் பார்த்துச் சொன்னார் மூன்று சிறு கறுத்தப் புள்ளிகள்தான் உங்கள் கண்களுக்குத் தெரிகின்றனவா? அதைத் தாங்கி நிற்கும் வெள்ளைப் பலகை தெரியவில்லையா என்று கேட்டார்.

உலகில் வாழும் நாம், உலகம் எமக்காகப் படைக்கப்பட்டுள்ளது என்று கருதுகிறோம். உலகத்தில் நாம் ஒரு அங்கமென எண்ணுவதில்லை. உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் எமக்காகப் படைக்கப்பட்டுள்ளன என எண்ணி தேவை, பயன், அதனால் வரும் விளைவுகள் பற்றிச் சிறிதும் சிந்தியாது பல பொருட்களை வீணாக்குகிறோம். துஷ்பிரயோகம் செய்கிறோம்.

விரைவு, வேகம், சுகம் இவைதான் இப்போதைய குறி. அதற்கு நாம் கொடுக்கும் விலைபற்றி சிறிதும் கவனத்தில் எடுப்பதே இல்லை. விளைவு சுற்றுச்சூழல் மாசடைவதால், குறிப்பிட்ட அளவு கிடைக்கும் வளங்களை வகை தொகையின்றி செலவு செய்தல், சுயநலம் இவைதான்.

குப்பை கூளங்கள் பற்றிக் கவலைப்படாததினால் சுற்றுச்சூழல் மாசடைகிறது. எம்மைச்சுற்றிக் குப்பைக் கூளங்கள் இருப்பது அசிங்கமாகத் தோற்றமளிக்கிறது. நோய்களுக்கு வழிகோல்கிறது. அவற்றைச் சிலர் ஆற்றில் தள்ளி மாசுபடுத்துகின்றனர். எரித்து காற்றை மாசுபடுத்துகின்றனர். நீர்நிலைகளுக்குப் பக்கத்தில் வெட்டி கசியும் நச்சுப் பொருட்களால் மண்ணையும் நீரையும் மாசுபடுத்துகின்றனர்.


குப்பை மேடுகளைக் குறைப்பது எப்படி? குப்பைகளைக் குறைக்க அதன் உற்பத்தியைக் குறைக்க வேண்டும். பல பொருட்களைப் பொட்டலப்படுத்துதலினால் அதனைப் பொட்டலப்படுத்தும் காகிதம், பிளாஸ்டிக் பைகள் குப்பையாகின்றன. சிறிது கவனம் ஆரம்பத்திலேயே எடுத்தால் இதைத் தவிர்க்கலாம்.

மீண்டும் பயன்படுத்தல் முறையினால் குப்பைக்குள் போகவேண்டிய பிளாஸ்டிக் பைகளும் காகிதங்களும் தேவையான பொருட்களாகி விடும்.

மறுசுழற்சி செய்தல் மூலம் பல பொருட்களுக்குப் புது உருவும் உபயோகமும் கிடைக்கின்றன.

மீண்டும் பயன்படுத்த முடியாத கண்ணாடிப் போத்தல்கள், உலோகப் பொருட்கள், தகர டப்பாக்கள், செய்தித்தாள்கள், பிளாஸ்டிக்குகள் ஆகியவற்றை மறுசுழற்சி செய்யலாம். உதாரணமாக கண்ணாடிப் போத்தல்களை துப்பரவு செய்து உடைத்து உருக்கிப் புதிய போத்தல்கள் செய்யலாம். இதைக் கண்ணாடித் தொழிற்சாலைகளில் செய்கிறார்கள். இதைப்போல் பல்வேறு பொருட்களை மறுசுழற்சிசெய்யும் தொழிற்சாலைகள் உலகில் உள்ளன.

## குப்பைகள் அழிவதற்கு எவ்வளவு காலம் ஆகிறது?

| | | |
|---|---|---|
| செய்தித்தாள் | ஒருசில வாரங்கள் |  |
| தோல் ஷூக்கள் | 50ஆண்டுகள்வரை |  |
| அட்டைப்பெட்டிகள் | பல மாதங்கள் |  |
| மென் பிளாஸ்டிக் | பல மாதங்கள் |  |
| வாழை இலை | ஒருசில வாரங்கள் |  |
| டயர்கள் | தெரியாது |  |
| பிளாஸ்டிக்பைகள் | 10-20 ஆண்டுகள் அல்லது பிளாஸ்டிக் வகையைப் பொறுத்து 100 ஆண்டுகளும் ஆகலாம் |  |
| உடைசல் உலோகங்கள் | 50 ஆண்டுகள்வரை |  |
| அலுமினியக் குவளைகள் | 80 ஆண்டுகள்வரை |  |
| பிளாஸ்டிக் புட்டிகள் | நூற்றுக்கணக்கான ஆண்டுகள் |  |
| கண்ணாடி உடைசல்கள் | ஆயிரக்கணக்கான ஆண்டுகள் |  |



### பொருள்களை மீண்டும் பயன்படுத்த சில வழிகள்...

நம்மிடம் எஞ்சிவிட்ட பல பொருட்கள் அதிக நாட்கள் பயன்தரக் கூடியவையாக இருந்தாலும், பெரும்பாலும் அவற்றை வீசியெறிந்து விடுகிறோம்.... இவற்றைக்கொண்டு அன்றாட பயன்பாடுடைய பொருட்களைத் தயாரிக்கலாம். இப்பொருட்களை மீண்டும் பயன்படுத்துமுன் நன்கு தூய்மை செய்துவிட வேண்டும்.

### பொம்மைகள் செய்தல்

#### குழந்தைப் பொம்மை




ஒரு துணியில் ஒரு குழந்தைப் பொம்மைக்கு வேண்டிய வடிவில் ஒரே அளவான இரு துண்டுகளை வெட்டி, சிறு திறப்பு விட்டுத் தைக்கவும். தைத்ததை உள்ளே திருப்பி எஞ்சிய பொருள் துணுக்குகளைத் திறப்பில் போட்டு அடைத்துத் திணித்து திறப்பை மூடித் தைத்துவிடவும்.

#### கிலுகிலுப்பை



பலநிறப் பிளாஸ்டிக் பாட்டில்களை நீண்ட பட்டைகளாக வெட்டிக் கொண்டு அவற்றை தெளிவாகத் தெரியக்கூடிய பிளாஸ்டிக் பாட்டிலில் போட்டு மூடி போடவும்.


#### அடுக்கு பாட்டில் முகப்புகள்



ஒரே மாதிரியான மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாட்டில்களை மேற்புறம்வெட்டி பிள்ளைகளிடம் கொடுத்தால், அதை அவர்கள் கோபுரம்போல் வைத்து விளையாடுவார்கள். வெட்டிய முனைகள் கைகளை அறுப்பதாக இருக்கக்கூடாது.

#### புதிர்

ஓர் அட்டையில் ஒரு படத்தை வரைந்து அல்லது ஒட்டிக் கொள்ளவும். அப்படத்தைப் பல துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். குழந்தையின் வயதுக்கு ஏற்ப அதிகப் படங்களை இதுபோல் ஒட்டி வெட்டிக் கொடுத்துப் புதிரை மேலும் கடினமாக்கலாம்.



## வீட்டுப் பயன் பொருள்கள்


**செய்தித்தாள் பைகள்**

செய்தித்தாள்களை ஓர் அளவாக மடித்து, சிறு பைகளாக ஒட்டி பொருள்களைப்போட்டு வைக்கலாம். இரண்டு மூன்று தாள்களை ஒன்றாகப் போட்டு ஒட்டுவது பையின் வலிமையைஅதிகரிக்கும்.




**பிளாஸ்டிக் பாட்டில் பெட்டிகள்**

இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களின் அடிப்பகுதிகளை வெட்டி ஒன்றைக் கொள்கலனாகவும் மற்றதை மூடியாகவும் பயன்படுத்தலாம். மூடியை அழகாகப் பூப்போல வெட்டலாம். முனைகள் கையை அறுக்காமல்இருக்குமாறு மழுங்கச் செய்யவும்.



**பிளாஸ்டிக் பை பாய்கள்**

பிளாஸ்டிக் பைகள் துளை விழுந்து மேலும் பயன்படுத்த முடியாது போகும்போது, அவற்றை பாய்களாக முடையலாம். பைகள் பல நிறங்களில் கிடைத்தால் நல்ல வேலைப்பாடுடன் முடைய முடியும்.



**சோடா பாட்டில் மூடி திரை**

சோடா பாட்டில் மூடிகளைச் சுத்தியலால் பாதியாக மடித்து நல்ல கனமான நூலில் கோத்து, இடையிடையே ஓர் அளவான மரக்கட்டைகளுடன் இணைத்து திரையாகத் தொங்கவிடலாம். இடையிடையே கவர்ச்சிகரமான வேலைப்பாடுகளையும் செய்யலாம்.



### டயர்களின் பயன்பாடுகள்

**மிதியடிகள்**

டயர்களை ஓர் அளவாக வெட்டி கம்பி நீக்கி முனை மழுக்கி மிதியடிகளாக்கலாம்.



**பூந்தொட்டிகள்**


டயரின் அடியில் பிளாஸ்டிக் பைகளை விரித்து மண், உரமிட்டு பூச்செடிகளை நட்டு முகம் பூத்து மகிழுங்கள்.



**ஊஞ்சல்**



டயரில் ஒருபுறம் நல்ல கயிறு கட்டி மரத்தில் கட்டினால் ஊஞ்சல்! மழை நீர் வடிய டயரின் அடியில் துளையிடவும்.





# பிளாஸ்டிக் பைகளுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்?



பிளாஸ்டிக் பைகள் காற்றிலே எளிதாக அடித்துச் செல்லக் கூடியவை. அவை புதர்களில் சிக்கும். ஆறுகளில் மிதக்கும். வேலிகளில் சிக்கிப் படபடக்கும் கழிவுநீர்க் கால்வாய்களை அடைத்துக் கொள்ளும்! விலங்குகளுக்கும் மனிதனுக்கும் தொல்லையாகத் தரையெங்கும் சிதறிக் கிடக்கும். வெகு சில வகைப் பிளாஸ்டிக் பைகளேமறுசுழற்சி செய்யப்படுகின்றன. பெரும்பாலான வகைகள் அழியப் பலநூறு ஆண்டுகளும் ஆகும். தென் ஆபிரிக்காவில் 'தேசீய மலர்' என்று அழைக்கப்படுமளவுக்குப் பிளாஸ்டிக் பைகள் சர்வசாதாரணம். இந்தியாவில் தெருவில் கிடக்கும் பிளாஸ்டிக் பைகளைத் தின்று நாளொன்றுக்கு 100 பசுக்களாவது மடிகின்றன! அண்மைக் காலமாகச் சில நாடுகளில் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதைக் குறைக்க சில முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன......

**அயர்லாந்து**

**நடவடிக்கை:** கடைகளில் வாங்க வருவோர் ஒவ்வொரு பிளாஸ்டிக் பைக்கும் 15 சென்ட் வரி கட்ட வேண்டும்.

**பலன்கள்:**

- ♣ பிளாஸ்டிக் பைகளின் பயன்பாடு 90% குறைந்துள்ளது.
- ♣ வாடிக்கையாளர்கள் கனமான, மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பைகளையோ கடைகளில் தரப்படும் தாள்களையோ பயன்படுத்துகின்றனர்.
- ♣ வரி மூலம் கிடைத்த பணம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களுக்குப் பயன்படுகின்றது.

**தைவான்**

**நடவடிக்கை:** கடைகளில் இலவசமாக வழங்கப்படும் பிளாஸ்டிக் பைகள்மீது தடை.

**அபராதம்:** கடைகளுக்கு 8,600 டாலர் வரையில்.

**பலன்கள்:**

பிளாஸ்டிக் தொழில் செய்வோரின் எதிர்ப்பு, அவர்களுக்குப் பிற வேலைகள் தர அரச உதவி உண்டு.

சந்தை வணிகர்கள், தெரு வியாபாரிகளுக்கு இச்சட்டம் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

**இந்தியா**

நடவடிக்கை: இடமாச்சல் பிரதேசம், கோவா, கேரளா, மகாராஷ்டிரா மாநிலங்களில் பாலி.'.பைபர் பைகளின் உற்பத்தி, சேமிப்பு பயன்பாடு, விற்பனை, பகிர்வு யாவும் தடைசெய்யப்பட்டுள்ளது.

**அபராதம்:** இமாச்சல் பிரதேசத்தில் பாலி.'.பைபர் பைகளை பயன்படுத்தும் எவருக்கும், ஆள் ஒருவருக்கு 7 ஆண்டுகள் சிறை அல்லது 2000 டாலர் அபராதம்.

**பலன்:** தடை சரிவர முறைப்படுத்தப் படாததால் மக்களிடம் அதிக மாற்றம் எதுவும் இல்லை.

**ஆய்வுக்குரிய கேள்விகள்**

பிளாஸ்டிக் பைகளில் நமது நாட்டுக்கு என்ன சிக்கல்?

பிளாஸ்டிக் பைகளில் உற்பத்தி - பயன்பாடு எண்ணிக்கை அளவைக் குறைக்க என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

இந் நடவடிக்கைகளின் எதிர் விளைவுகள் யாவை?

எப்படிப்பட்ட நடவடிக்கை மிகவும் பயன்தரும்? அதிகப் பின்னடைவு உண்டாக்காது?

பிளாஸ்டிக் பைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவது எவ்வாறு?



**வங்காள தேசம்**

**நடவடிக்கை:** பாலி.'.பைபர் பைகளுக்குத் தடை

அபராதம்: பாலி.'.பைபர் பைகளை தயாரிக்கும் எவருக்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது 17,000 டாலர் அபராதம். பயன்படுத்துவோர் கண்டுபிடிக்கப் பட்டால், ஒருவருக்கு 9 டாலர் அபராதம்.

**பலன்:** இப்போது சணல் பை அதிகப் பரவலாக பயன்பாட்டில் உள்ளன. இது சணல் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்துள்ளது.

**தென் ஆபிரிக்கா**

**நடவடிக்கை:** மெல்லிய பிளாஸ்டிக் பைகளின் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது.

**அபராதம்:** மெல்லிய பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துபவருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது 13,800 டாலர் அபராதம்

**பலன்கள்**

கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய மறுசுழற்சி செய்யக்கூடிய தடிமனான பைகளை வாங்குகிறார்கள்.

மெல்லிய பைகளுக்கே தடை என்பதால் அவை தெருவில் கிடப்பது குறைந்துள்ளது. மாறாக தடினமான பைகள் அதிகரித்துள்ளது.

மெல்லிய பைகள் செய்யும் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டு விட்டதால் வேலை இழப்பு.

பிளாஸ்டிக் பைகளிலிருந்து பொருட்களை செய்பவர்கள் இப்போது விலைகொடுத்து வாங்குவதால் அவர்களுக்கு இலாபம் குறைகிறது.

நன்றி - நல்வழி டிசம்பர் 2004

# 2004ம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு பெற்றவர்



வாங்கரி மாதாய்

அல்பிரட் பெர்னார்ட் நோபல் (1833 - 1896) என்பவரால் வெடிமருந்துகள் மூலம் ஈட்டப்பட்ட பெருந்தொகைப் பணத்தை வைப்பலிட்டு அதிலிருந்து வரும் வருமானத்தில் நடத்தப்படும் "நோபல் பரிசு"த் திட்டம் 1901ம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் நடைமுறையில் இருந்து வருகிறது.

சென்ற வருட சமாதான நோபல் பரிசு கென்யாவின் சுற்றுச்சூழல் துணை அமைச்சர் "வாங்கரி மாதாய்" என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் ஆபிரிக்கா நெடுகிலும் மூன்றுகோடி மரங்களை நட்ட 'பசுமை வளையம்' இயக்கத் தலைவர்.

நமது சுற்றுச்சூழல் மாசடைந்தால் நமது அமைதிக்கு ஊறு நேரும் என்று தற்போதைய ஆய்வு மதிப்பீடுகளால் அறியப்படுகிறது. மரங்கள் நட்டு நமது சுற்றுச்சூழலைப் பேணும் பணியில் பெரும் பங்காற்றியவருக்கு இம்முறை சமாதான நோபல் பரிசு கிடைத்தது மகிழ்ச்சிக்குரியது.



# 88 வயது மூதாட்டியின் எண்ணச் சிதறல்



திருமதி.
கா.மகமாயிப்பிள்ளை

தண்டமா மலரின் தேனை
தனித்தனி வனத்தில் வாழும்
வண்டதை அறியும் அல்லால்
மண்டுகம் அறிந்திராது
கண்டதும் கடந்து பேசும் - கசடற்கு
நல்லார் பொல்லார்
இரண்டு தெரியாதையர்
இராஜ கோபாலமாதே.

ஆழ்இலை பூவும் காயும் - அதில்
ஒரு பழமும் உண்டேல்
சாலவெ படசி எல்லாம் - தன்குடிலி
என்றே வாழும்
ஆழிலை ஆதி போனால் - அங்கு
வந்திருப்பாருண்டோ.

சுற்றும் கருங்குழலி சுரத்தோர்
ஆதியோர் போல்
எற்றும் சுடுகாட்டில் எறு கரையில்
ஆண் பனைக்குள்
புற்றில் வைத்த தேனை ஒக்கும்
தனந்தோர்க்கு ஒன்று சயத்தனம்.

ஆபத்திற்கு உதவாப் பிள்ளை
அரும் பசிக்கு உதவா அன்னம்
தாகத்தை தணியா தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டில்
கோபத்தை அடக்கா வேந்தன்
குரு மொழி கொள்ள சிஷ்யன்
பாவத்தை தீர்த்தும்
பயனில்லை எழுந்தானே.

பிள்ளை தன் வயதில் மூத்தாள்
பிதாவின் சொற்புத்தி கேளான்
கல்வி நல் குழலால் மூத்தாள்
கணவன் சொற் கருதிப் பாரான்
வித்தை கற்றான்
சீடனும் குருவைத் தேடான்
உள்ள நோய் பிணிகள் தீர்த்தாள்
உலகர் வைத்தியரை தேடார்.

(அறிவு சித்திரை 1988ல் வெளிவந்தது)

# அமெரிக்கப் பயணம்

S.P. ராமச்சந்திரா

சுவாமி கெங்காதரானந்தாவின் தொடர்பு 1972ல் இருந்து ஏற்பட்டது. 1975ல் திருக்கோணமலைக்கு மாற்றம் கிடைத்தபின் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. அவருடைய ஆசியுடன்தான் எனது அமெரிக்கப் பயணம் நடந்தேறியது.

அப்போது நான் கிண்ணியா அரசினர் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் வெளிநாட்டுக்குப் போவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் விடுமுறை எடுப்பது கஷ்டமான விடயமே. எனினும் சுவாமிஜியின் ஆசியால் எனக்கு மூன்றுமாத விடுமுறை தந்தார்கள்.

விடுமுறையை எடுத்துவிட்டு சுவாமிஜியின் அமெரிக்கப் பக்தர்களில் ஒருவரான மைக்கேல் ரூபன்ன்டீனின் செய்தி வரும்வரை காத்திருந்தேன். அமெரிக்கா செல்லுமுன் பால்காய்ச்சவேண்டு மென்பதற்காக நான் கட்டிக்கொண்டிருந்த வீடு முழுதாக முடியாமல் ஒரே ஒரு அறையைப் பூரணப்படுத்தி அந்த ஆண்டு தைப்பூசத்தன்று பாலும் காய்ச்சி முடித்துவிட்டேன். ஒவ்வொரு நாளும் கிண்ணியாவிலிருந்து எனது மோட்டசைக்கிளில் திருக்கோணமலை வந்து சுவாமிஜியைத் தரிசித்துவிட்டு வீட்டு வேலையை முடிக்க ஆவன செய்து கொண்டிருந்தேன்.

சுவாமிஜியிடம் ஒவ்வொரு நாளும், சுவாமிஜி! நான் எனது பயணத்தை ஆரம்பிக்கவா என்று கேட்ட வண்ணமிருந்தேன். மைக்கேலிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை சுவாமிஜியும் விடை தருவதாக இல்லை.

மைக்கேல் நியுயோர்க்வாசி அவர் அவருடைய பெண் பங்காளியுடன் இலங்கையைச் சுற்றிப் பார்க்க வந்த சமயம் மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்டு திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். அப்போது தனக்கு வைத்தியம் செய்த டாக்டர் அருள்ராமலிங்கத்திடம் யோக சாஸ்திரத்தைப் பற்றிப் பேசினார். அதில் கூடிய விளக்கம் பெற யாரை நாடலாமென விசாரித்தபோது அவர் சுவாமி கெங்காதரானந்தாவின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார். சுவாமிஜி மைக்கேல் தன்னிடம் வந்தபோது வழமையாகச் செய்வதுபோல் எனக்குச்



செய்தி அனுப்பினார் அவருடன் உரையாடுவதற்கு உதவுவதற்காக

யோகம் கடையில் வேண்டும் Instant கோப்பி மாதிரி ஒரு சரக்கல்ல என்று அவர் யோகத்தைப் பற்றிக் கேட்டபோது பட்டெனப் பதிலளித்தார் சுவாமிஜி. பின்னர் அவருடன் அவரது விபரங்களைப் கேட்டறிந்தபோது சில ஆரம்ப யோகப் பயிற்சிகள் பற்றி விளக்கமளித்தார்.

மொழிபெயர்ப்பாளராக ஏற்பட்ட பரிட்சயமே பின்னர் நட்பாக மாறியது. மைக்கேல் போகும்போது என்னிடம் நான் அமெரிக்கா வந்தால் எல்லாவிதமான உதவிகளும் செய்வதாகவும் வேலையொன்று எடுத்துத் தருவதாகவும் வாக்குறுதி தந்து தனது உலகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நான் எடுத்த மூன்றுமாத லீவில். இரண்டு மாதங்களும் இரண்டு வாரங்களும் கழிந்து விட்டன. சுவாமிஜி இன்னும் விடைதருவதாக இல்லை. உவர்மலையில் அரசாங்கம் உத்தியோகத்தர்களுக்கென விற்ற காணியில் ஆரம்பித்த வீடு ஓரளவு பூர்த்தியாகிவிட்டது. மே 25ம் திகதி எமது அன்னையின் பெயரால் ஆரம்பித்த அன்னை நிதிய 8வது ஆண்டுவிழா நடைபெற இருந்தது. எனது விடுமுறை முடிய இன்னும் ஒரு வாரமே இருந்தபோது சுவாமிஜி எனது அமெரிக்கப் பயணத்திற்கு அனுமதி தந்தார். மே 25ந் திகதி 8வது ஞானாம்பிகை தாபித ஆண்டுவிழா நடைபெற்றது. மே 27ல் திருக்கோணமலையிலிருந்து புறப்பட்டு 28ந் திகதி இரவு அமெரிக்கா பயணமானேன். பரிஸ் நகரத்தில் இறங்கி விமானம் மாறி 29ந் திகதி பிற்பகல் 5 மணிபோல் நியூயோர்க் கெனடி விமான நிலையத்தில் இறங்கினேன்.

டக்சி ஒன்றில் 82ம் வீதியில் அமைந்திருந்த எனது நண்பன் மைக்கேலின் வீடு சென்றேன். அங்கு அவர் தனது நண்பி ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தார். மலேசியப் பயணத்தை முடித்துக்கொண்டு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் வந்து சேர்ந்ததைத் தெரிவித்தார். அப்போதுதான் சுவாமிஜி ஏன் எனக்கு விடைதரச் சுணங்கியதன் காரணம் விளங்கியது.

அவருடைய நண்பியின் காரில் முதலில் ஒழுங்கு செய்த கிரியா பாபாஜி சங்க நியுயோர்க் கிளைக்கு என்னை அழைத்துச் சென்றார். அப்போது மாலை 7.30 மணி இருக்கும் எனினும் இருட்டுப்படவில்லை. நியுயோர்க்கில் அமைந்திருந்த கிரியா பாபாஜி சங்கக் கட்டிடம் கிழக்கு

7ம் வீதியில் அமைந்துள்ளது. எனது பால்ய நண்பர் கந்தசாமி கிரியா பாபா சங்கத்தில் ஒரு அங்கத்தவர். அவர் அங்கு தங்கியிருந்த ஸ்டீபன் என்பவருக்கு நான் அமெரிக்கா வருவது பற்றித் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க நீக்ரோவான ஸ்டீபன் சங்கத்தின் ஆசிரமவாசி. கிழக்கு நியுயோர்க் மேற்கு நியுயோர்க்கைவிட சிறிது வசதிகள் குறைந்த பகுதியே. அதுவும் கிரியா பாபா சங்கக் கட்டிடம் கதிரை மேசைத் தளபாடங்களோ இன்றி வெறிச்சோடிக் கிடந்தது.

எனது நண்பர் மைக்கேல் என்னை அங்கு இறக்கிவிட்டு விடைபெற்றுச் சென்றார். போகும்போது தனது தொலைபேசி இலக்கத்தைத் தந்து என்ன தேவைக்கும் தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி சொல்லிச் சென்றார்.

ஸ்டீபன் என்னை வரவேற்று உபசரித்தார். அந்த அறையில் தளபாடங்கள் எதுவுமே இல்லை. தரையில் இரண்டு பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. மூலையில் அன்று தயாரிக்கப்பட்ட உணவு பாத்திரங்கள் இருந்தன.

தான் இரவுப் போசனம் முடித்து விட்டதாகவும் என்னை உண்ணும்படிகூறி ஒரு தட்டில் சோறு கறியுடன் சாப்பாடு தந்தார். அவரது கறிகளில் ரசமும் இருந்தது.

எவருமே தெரியாத அமெரிக்காவில் இறங்கி ஒருசில மணிநேரத்தில் நியுயோர்க் வீதியில் காரில் சவாரி செய்து வீட்டிலுண்ணும் உணவு கிடைத்த புதுமையை எண்ணி வியந்தேன். சுவாமிஜியின் ஆசிக்கு மனதினுள் நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

கிரியா பாபாஜி சங்கம் அகில உலக அளவில் 56க்கதிகமான கிளைகளுடன் இயங்கும் ஒரு ஆத்மீக தாபனம். அதன் ஸ்தாபகர் யோகிராமையா. இவர் இந்தியாவில் நாட்டுக்கோட்டை செட்டிக்குலத்தில் பிறந்தவர். அவர் நான் அமெரிக்கா சென்ற நான்காவது நாளன்று என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கிரியா பாபாஜி சங்கக் கட்டிடத்தில் அங்கத்தவர்கள் அல்லாதோர் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. அதனால் உடனே என்னை அங்கத்தவராக்கும்படியும் இல்லையேல் 48 மணி நேரத்தில் வேறு இடம் பார்த்துப்போகும்படியும் கூறினார்.



இந்தச் செய்தியுடன் எனது நண்பர் மைக்கேலைச் சென்று சந்தித்தேன். அவரும் ஏதாவது ஒழுங்கு செய்யலாமெனக் கூறிவிட்டு மறுநாள் வரும்படி சொல்லிவிட்டார். மறுநாள் அவரைப்போய்ப் பார்த்தபோது ஒரு சிறு பட்டியலுடன் என்னைக் காத்திருந்தார். ராமகிருஸ்ணமடம், சுவாமி சச்சிதானந்தாவின் Intequral Yoga Instiute ஆகியவற்றின் விலாசங்களை எழுதி வைத்திருந்தார். அவ்விடங்களில் சென்று தங்குவதற்கு இடம் கேட்கலாமெனக் கூறினார்.

அன்று மாலையே அவரது லிஸ்டில் உள்ளபடி இடங்கள் பார்ப்பது என்று தீர்மானித்தோம். சுவாமி சச்சிதானந்த யோகியை எனக்குத் தெரியுமென்று கூறினேன். அவர் சொன்னார் I.Y.T க்குப் பத்து தினான்கு கிளைகள் உள்ளன. அவற்றில் அதிகமாகKENTUCKY கிளையில் தான் சுவாமி கூடுதலாகத் தங்குவார். அதோடு வேர்ஜினியாவின் புதிதாக வேண்டிய 600 ஏக்கர் காணியில் அமைத்துவரும் யோகக் கிராமம், யோகாவில் அவர் நிர்மாணவேலைகளை மேற்பார்வை செய்யப் போவதுண்டு என்றும கூறினார்.

சுவாமி கெங்காதரானந்தாவை மனதில் நினைத்து எனக்குப் புதுஇடம் கிடைத்துவிட வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன். நியுயோர்க்கில் பசுமைமிக்க கிரீன்வீச் கிராம (Greenwich Village)த்தில் அமைந்திருக்கும் சுவாமி சச்சிதானந்த யோகியின் ஸ்தாபனத்தை நோக்கிச் சென்றேன்.

அழகிய நான்கு மாடிக்கட்டிடம் கீழே வருவோரை வரவேற்று விசாரணை நடத்தும் கூடம். நான்கைந்து பேர் என் முன்னே அங்கு நின்றதால் நான் ஓரமாக இருந்த கதிரையில் அமர்ந்தேன். என் முறைவர போய் இருக்க இடந்தேடி வந்தாகக் கூறினேன். தலைவரிடம் பேசவெண்டும் சிறிது நேரம் என்னை இருக்கும்படி கூறினார்கள். அங்கு இருக்கும்போது ஆச்சிரமவாசிகள் ஒருவரைக் கேட்டேன் இப்போது சுவாமி சச்சிதானந்த யோகி எங்கு இருக்கிறார் என்று. எனக்கு இன்ப அதிர்ச்சி தரும் செய்தியாக சுவாமி அன்று அங்கு வந்திருப்பதைக் கூறினார்கள்.

1951-52ம் ஆண்டு சுவாமி சச்சிதானந்தா திருக்கோணமலை வந்தார். திருக்கோணமலையைச் சேர்ந்த சச்சிதானந்த மாதாஜி ரிஷிகேசத்தில் அவரது குருவான சுவாமி சிவானந்தரிடம் அவரது கருத்துக்களைப் பரப்பவும் திருக்கோணமலையில் அநாதைக் குழந்தைகளைப். பராமரிக்கவும் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து

நடத்துவதற்கு ஒரு சுவாமியை அனுப்பும்படி விடுத்த வேண்டு கோளுக்கிணங்க சுவாமி சச்சிதானந்த யோகி திருக்கோணமலை சிவானந்த தபோவனத்தை ஆரம்பித்து வளர்த்தெடுக்க அனுப்பப்பட்டார்.

சுவாமி சச்சிதானந்தயோகி திருக்கோணமலை வந்து தபோவனத்தை ஆரம்பித்ததோடு திருக்கோணமலை ராமகிருஷ்ணமிசன் இந்துக்கல்லூரியில் யோகாசன வகுப்புகளும் ஆரம்பித்தார். அப்போது கல்கியில் வெளிவந்த யோகாசன பயிற்சி பற்றிய கட்டுரைகள் பிரபலமாகியிருந்த காலம். சுவாமிஜி நடத்திய ஆசனவகுப்புக்களில் பங்குபற்றி, பின்னர் சிவானந்த தபோவனத்தில் நடக்கும் உற்சவங்களிலும் சிரமதானங்களிலும் பங்குபற்றினேன். அப்போதிருந்தே சுவாமிஜியின் அறிமுகம் எனக்குண்டு. எனது தமையனார் சுவாமிஜியிடம் கூடிய ஈடுபாடு கொண்டு ஆத்மீகம் பற்றிய சந்தேகங்களை சுவாமிஜியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டதில் மிகவும் அந்நியோன்ய உறவு கொண்டிருந்தார்.

பின்னர் அவர் கண்டியில் தென்னக்கும்புர என்னும் இடத்தில் ஆசிரமம் அமைத்து ஆன்மீக பயிற்சிகள் யோகப் பயிற்சிகள் சொல்லிக் கொடுத்த காலங்களிலும் அவரிடம் சென்று வந்துள்ளேன். இதனால் சுவாமி சச்சிதானந்தாவின் மனதில் இடம்பிடித்திருந்தேன். சுமார் பதினைந்தது ஆண்டுகள் தொடர்பு இல்லாத போதும் அவர் என்னை மறந்திருக்கமாட்டார் என்ற துணிவுடன் அவரைச் சந்திக்க முயற்சித்தேன். சுவாமிஜியை எனக்குப் பலகாலம் தெரியுமென்ற செய்தி அங்குள்ள ஆச்சிரமவாசிகளுக்கு வியப்பாக இருந்தது. அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளும் ஆவலில் பல கேள்விகளை கேட்டார்கள்.

அவர் யாருடனோ பேசிக்கொண்டிருப்பதாகவும் அதுவரை என்னை இரண்டாவது மாடியில் கொண்டுபோய் பழங்கள், பிஸ்கட் போன்றவை தந்து உபசரித்தார்கள். சுவாமிஜியைக் கண்டு வணங்கியபோது அவர் என்னைப் பெயர் சொல்லிக்கூப்பிட்டது பெரும் ஆனந்தத்தைத் தந்தது.

சுருக்கமாக நான் எனது அமெரிக்க விஜயம் பற்றிய விபரங்களைக் கூறினேன். முடிந்தால் இங்கு வேலை எடுத்துத் தங்க இருப்பதையும் எனது அமெரிக்க நண்பர் மைக்கேல் வேலை எடுத்துத் தருவார் என்றும் கூறினேன். கிரியா பாபா சங்கத்தில் யோகிராமையாவுடன் நடந்தவற்றையும் கூறினேன். DONT BE A BURDENT TO THE INSTITUE AND DONT TAX YORSELE TOOMUCH என்ற வசனங்களுடன் அவர் எனது வேண்டுகோளை



ஏற்று மறுமொழி சொன்னார். ஸ்தாபனத்துக்குச் சுமையாக இராது என்னையும் வருத்தாது சிறுதொகை அன்பளிப்புடன் அங்கு தங்கும்படி கூறினார். அப்போது தலைவராக இருந்த ஆத்மானந்தாவிடம் தான் பேசுவதாகவும் கூறினார்.

மூன்றாவது மாடி, ஆச்சிரமவாசிகள் தங்குமிடமாக பாவிக்கப்பட்டது. மெத்தைகள் நிலத்திலும் ஒன்றுக்குமேல் ஒன்றாக இருக்கும் கட்டில்களிலும் போடப்பட்டிருந்தன.அந்த ஹால் அழகாகவும் சுத்தமாகவும் இருந்தது. எனக்கு நிலத்திலுள்ள மெத்தை ஒதுக்கப்பட்டது. நிற்கும் நாளொன்றுக்கு 10 டொலர்தான் கொடுக்க வேண்டும் என ஒழுங்கு செய்யப்பட்டது. மறுநாளே எனது பெட்டி, மற்றும் சாமான்களுடன் அங்கு இடம்மாறி விட்டேன்.

காலையில் 5.30 மணிக்கு எழுந்து காலைக்கடன் முடித்துக் கொண்டு 4வது மாடியில் இருக்கும் பெரிய ஹாலில் ஆசனம் தியானம் செய்ய எல்லோரும் செல்ல வேண்டும். அங்கு இருந்த 15க்கு மேற்பட்ட ஆச்சிரமவாசிகளில் ஒருவரைத்தவிர எல்லோரும் யோகமுறைக்கு தம்மை அர்ப்பணித்து வாழ்க்கைநடத்தி வருகிறார்கள். ஒரு ஜப்பானியர், ஒரு கிரேக்கர், ஒரு செக்கள்ளோவாக்கிய யுவதி உட்பட பல அமெரிக்க இளைஞர்களுடன் நானும் கூட்டுக் குடும்பத்தில் ஒருவராக ஜீவியம் நடத்த ஆரம்பித்தேன்.

1965ம் ஆண்டில் அமெரிக்கா பெரும் பொருளாதார வளர்ச்சியுடன் செழிப்பாக இருந்தகாலம். அப்போதுதான் அங்குஒரு சமுதாயப் புரட்சி ஆரம்பமாகியது. வசதியுள்ள குடும்பத்தில் வாழ்ந்த யுவ, யுவதிகள் தங்கள் வழமையான வாழ்க்கயில் அர்த்தமில்லை என புரட்சி பண்ணி தாம் Flower Children மலர் குழந்தைகள் என வீட்டைவிட்டு வெளியேறி பூங்காவிலும் தெருஓரத்திலும் சீவியம் நடத்தினார்கள். பலர் இசைக்கருவிகளுடன் பூங்காவிலும் தெருவோரங்களிலும் ஆடிப்பாடிக்கொண்டு திரிந்தனர். அவர்களில் சிலர் மெஸ்கலின் LSD ஹெரோயின் போன்ற போதை வஸ்துக்களைப் பாவிக்க ஆரம்பித்து அதற்கு அடிமையாகி தமது வாழ்வை அழித்துக் கொண்டிருந்தனர்.

1981ம் ஆண்டு நான் அமெரிக்காவில் இருந்தபோதுதான் சுவாமி சச்சிதானந்த யோகியின் அமரிக்க விஜயத்தின் 15வது ஆண்டு விழாவை அமெரிக்காவின் பல பாகங்களிலும் இருந்த சச்சிதானந்த யோகியால், ஆரம்பிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்ட ஆசிரமங்களில் வசித்த அவரது

சீடர்கள் கொண்டாடினார்கள். நியுயோர்க்கில் இருந்து சுமார் 200 கிலோமீற்றருக்கு மேல் இருக்கும் கென்டக்கி (Kentucky) யிலுள்ள ஆசிரமத்தில் கொண்டாடப்பட்டது.

கிறீன்விச் கிளையிலிருந்த ஆசிரமவாசிகள் அனைவரும் ஒரு வானில் கென்டக்கி சென்றோம். வேறு கிளைகளிலிருந்தும் சீடர்கள் வந்திருந்தனர். விழா ஆரம்பமாகியது. சுவாமிஜி அங்கு வந்ததைப் பற்றிப் பலரும் பேசினர். அப்போது அவரது வருகை பற்றிய நாடகம் போட்டார்கள். 1965ம் ஆண்டு யுவ யுவதிகள் என்ன செய்வதென்று அறியாது அலைந்து திரிந்த அந்த நாட்களில் தர்ம தேவதை போன்று அமெரிக்காவுக்கு எமது குரு சச்சிதானந்தா வருகை தந்தார் என்பதை இசைக்கருவிகள் முழங்க அவரது படத்தை மேடையில் வைத்து ஒளிபாய்ச்சி நடித்தது உடம்பைச் சிலிர்க்கவைத்தது.

இரண்டு நாட்கள் மட்டுமே அமெரிக்காவிற்குப் பேச வந்த சுவாமி சச்சிதானந்தாவின் வருகை நீண்டு நீண்டு இப்போ 15 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்ட வரலாற்றை அந்த நாடகம் எடுத்துச் சொன்னது.

சுவாமி சச்சிதானந்தாவின் அன்பும், பண்பும், அழகிய தோற்றமும், பேச்சு வன்மையும் செயல்திறனும் அமெரிக்க மக்களிடையே அவருக்குப் பெரும் செல்வாக்கையும் நன்மதிப்பையும் பெற்றுத்தந்தன. அவர் அங்கு சென்ற சில காலங்களில் வாழ்க்கையில் குறிக்கோளற்று அர்த்தமறியாது அலைந்து திரிந்த அமெரிக்க யுவ யுவதிகளுக்கு அவர் ஓர் வழிகாட்டியாக ஒளிப்பிழம்பாய் அன்புச் சுரங்கமாக இருந்தார். அவர்களின் சந்தேகங்களை திருப்திகரமாகப் போக்கினார். அதனால் அவரது ஆசிரமமான INTEGRAL YOGA INSTITUTE பல கிளைகளுடன் பல்வேறு மாநிலங்களில் விரிவடையத் தொடங்கியது.

VIRGINIA மாகாணத்தில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு யோகக் கிராமம் - YOGA VILLA என்ற கிராமத்தை ஸ்தாபித்தார். மலைக்குன்றுகளும், ஆறும் தன்னகத்தே கொண்ட அந்த அழகிய கிராமத்தில் மக்கள் வந்துபோக ஒரு சிறுவிமான நிலையம்கூட இருக்கிறது. அப்போதுதான் அவரது கனவுச்சின்னமான சகல மதங்களையும் உள்ளடக்கிய LIGHT OF TRUTH UNIVERSAL SHRINE" (LOTUS)" கோவில் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

வேர்ஜினியா சென்று யோகக் கிராமத்தையும் அதன் அழகையும் அமைப்பையும் கண்டு ஆனந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது எனது அதிர்ஷ்டமே.



# தியானம் என்பது நிகழ்கணத்தில் - ஓஷோ

மனம் ஒருமுகப்படுத்துகிறது. கடந்த காலத்திலிருந்துதான் அது அது செயல்படுகிறது. தியானம் நிகழ்கணத்தில் நடக்கிறது. நிகழ்காலத்தின் மூலமாகவே நடக்கிறது. நிகழ்கணத்திற்கு தரப்படும் நேரடிப் பதிலேதியானம். அது ஒரு எதிர்வினை அல்ல. முடிவுகளில் இருந்து அது வினை ஆற்றுவதில்லை. இருக்கின்றதைக் காண்பதில் இருந்துதான் இயங்குகிறது.

உங்கள் வாழ்க்கையை உற்றுக் கவனியுங்கள். முடிவுகளில் இருந்து வினையாற்றும்போது ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது. நீங்கள் ஒரு மனிதரைப் பார்க்கிறீர்கள். அவரால் கவரப்படுகிறீர்கள். அவர் ஒரு அழகான மனிதர். பார்க்க நன்றாக இருக்கிறார். கள்ளங்கபடமற்றவராகத் தெரிகிறார். அவரது கண்கள் அழகாக உள்ளன. அவரது அலை இயக்கங்கள் (Vibe) அருமையாக உள்ளது. ஆனால், அதன் பிறகு அந்த மனிதர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு 'நான் ஒரு யூதன்' என்கிறார். நீங்களோ ஒரு கிறிஸ்தவர். உடனே ஏதோ இடறுகிறது. இடைவெளி ஏற்படுகிறது. இப்போது அந்த மனிதர் கள்ளங்கபடமற்றவராகத் தெரிவதில்லை. அழகாக தெரிவதில்லை. யூதர்களைப் பற்றி உங்களுக்கென சில கருத்துகள் உள்ளன. அல்லது அவர் ஒரு கிறிஸ்தவர், நீங்கள் ஒருயூதர் என்போம். கிறிஸ்தவர்களைப் பற்றி உங்களுக்கு சில தனிப்பட்ட (முன் முடிவான) கருத்துக்கள் உள்ளன.

கடந்த காலத்தில் கிறிஸ்தவம் யூதர்களுக்கு செய்தவை பற்றி, பிற கிறிஸ்தவர்கள் யூதர்களுக்கு செய்தவை பற்றி, வரலாறு நெடுக யூதர்களை அவர்கள் கொடுமைப்படுத்தியதைப் பற்றி.. திடீரென (எதிரே நிற்கும்) அவர் கிறிஸ்தவராகக் காணப்படுகிறார். உடனடியாக ஏதோ மாறுபடுகிறது. முடிவுகளில் இருந்து, முன்னூகங்களின் மூலமாக நீங்கள் செயல்பட முடியாது. மனிதர்களைப் பாகுபாடு செய்து அதன்படியே இயங்கவும் முடியாது. மனிதர்களைத் தனித்தனி புறாக்கூண்டுகளுக்குள் பிரித்து அடைக்கவும். உங்களால் முடியும். நூறு கம்யூனிஸ்டுகள் உங்களை ஏமாற்றி இருக்கலாம். ஆனால் (அந்நிலையிலும்) 101வது கம்யூனிஸ்டை நீங்கள் சந்திக்கும்பொது 'கம்யூனிஸ்டுகள் ஏமாற்றுக்காரர்கள்' என்று, உங்கள் மனதில் நீங்கள் உருப்போட்டு வைத்திருக்கும் வாய்ப்பாட்டை நம்பியபடியே சந்திக்காதீர்கள்இந்த மனிதர் வேறுவிதமான மனிதராக இருக்கலாம். ஏனென்றால் எந்த 2 நபரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. முடிவுகளின் மூலம் நீங்கள் செயல்படும் போதெல்லாம் அது மனத்தின் செயல்பாடாகவே இருக்கிறது. நிகழ்காலத்துக்குள்நீங்கள் நேரடியாகப் பார்த்தால், யதார்த்தத்தை - உண்மையை எந்த விதமான கருத்தும் குறுக்கிட்டுத் தடுக்க, நீங்கள் அனுமதிக்காவிட்டால், உண்மையை நேரடியாகக் கண்டுணர்ந்து அந்தப் பார்வையில் இருந்தே நீங்கள் இயங்கினால், அதுதான் தியானம்.

நன்றி - ஓஷோவின் 'தியானம் என்றால் என்ன?

# சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை ஸ்தாபித 31வது ஆண்டுவிழா மலர் வெளியீட்டு வைபவம்

அன்னை நிதியம் (Ammah Found) என்று சுருக்கமாக அழைக்கப்படும் அன்னை தந்தை பெயரால் நடத்தப்படும் சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை ஸ்தாபிதத்தின் 31வது ஆண்டுவிழா 25-5-2004ல் நிகழ்ந்தது.

30வது ஆண்டுவிழாவின் போது வெளியிடப்பட்ட 30வது ஆண்டுவிழா - முத்துவிழா மலர் வெளியிட்டதுபோல், தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஆண்டுவிழா மலர் வெளியிடுவதென தீர்மானிக்கப்பட்டு 31வது ஆண்டுவிழா மலர் அன்னை ஞானாம்பிகையின் பிறந்த தினமான டிசம்பர் 6ந்திகதி நடைபெற இருந்தது. எனினும் அது பிற்போடப்பட்டு, திருமணமாகிய திருமதி சிறிதரி சரவணபவன் அவரது கணவருடன் வாழக் கனடா செல்லு முன்னும், மேற்படிப்பிற்காக இங்கிலாந்து செல்ல இருந்த ஹரேகிருஷ்ணராமின் பிரயாண திகதிகளுக்கு முன்னதாகவும் 18-12-2004 சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

கனடாவிலிருந்து இரு குழந்தைகளுடன் வந்த திருமதி பகீரதியும் ஜனவரியில் கனடாதிரும்ப இருந்தார். அவர் தனது குழந்தைகளுடன் கலந்து கொண்டார்.

முதலில் சிறிதரி, ஹரேகிருஷ்ணராம் இவர்களுக்கு நடத்தும் விருந்துபசாரமும் இவ்வெளியீட்டு விழாவோடு இணைக்கப்பட வேண்டுமென பகீரதி விரும்பினார். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.


திடீரென 18ந் திகதி காலையில் அன்றே வெளியீட்டு விழா நடத்த வேண்டுமென முடிவெடுத்து மாலை சுவாமி கெங்காதரானந்தாவின் பஜனை நடந்தபின் 57 பிரதான வீதியில் இவ்விழா நடைபெற்றது.

மாலையில் வந்த திரு. சிவசுப்பிரமணியமும், காந்தி மாஸ்டரும் உடன் அழைப்பை பெருந்தன்மையுடன் ஏற்று வருகை தந்தனர். திரு. சிவசுப்பிரமணியம் 31வது ஆண்டுவிழா மலரை வெளியிட அதன் முதற்பிரதியை காந்திமாஸ்டர் பெற்றுக்கொண்டார்.



30வது ஆண்டு விழாமலரின் பெரும்பகுதி பணச்செலவை தயாபரன் நர்மதா குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டனர். ஏனைய ஆதி அங்கத்தவர்கள் குடும்பங்களும் சமமாக செலவைப் பங்கிட்டு ஏற்றுக்கொண்டனர். 31வது ஆண்டுவிழா உபயகாரரான குணச்சந்திரன் செந்தில் தம்பதிகள் இவ்வாண்டு விழாமலரை வெளியிடும் செலவை முழுதாக ஏற்றுக் கொண்டனர்.

பின்வரும் படங்கள் வெளியீட்டு விழாவின்போது எடுக்கப்பட்டவை.



விழாவிற்கு வருகைதந்த அனைவரும்



திரு. கா. சிவசுப்பிரமணியம்31வது ஆண்டுவிழா மலரின் முதலாவது பிரதியை காந்தி ஐயாவிற்கு வழங்குகிறார்



நூலகம்

# வயதில்லா உடலும் காலமில்லா மனமும்

சந்திரராம்

இக்கட்டுரைத் தொடர் பௌதிகவியலின் நவீன போக்குகளை அனைத்து மட்ட வாசகர்களுக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கில் வெளியிடப்படுகின்றது. எவ்விதமான அறிவையும் பெற்றுக்கொள்வது, சரியான அறிவை நோக்கிய தேடலுக்கு இன்றியமையாதது. இக்கட்டுரை வாசகர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு ஏதேனும் விளக்கவீனங்களை ஏற்படுத்துமாயின் உங்கள் சந்தேகங்களை எம்முடன் தொடர்புகொண்டு கேளுங்கள் கட்டுரையாளர் அதற்கான தகுந்த விளக்கங்களைத் தர காத்திருக்கிறார். விமர்சனங்கள் வந்தேயாக வேண்டும் விவாதங்கள் நடந்தே தீர வேண்டும். - விளக்கு -

பௌதிகவியல் அறிவியலின் அங்கம் மட்டுமல்ல அதுவே அறிவியலின் ஆதாரமும் கூட. மேற்குலக பௌதீகமும் அறிவியலும் 17ம் நூற்றாண்டுவரை "அரிஸ்டோட்டில்" இன் தத்துவங்களின் பிடியில் இருந்து வந்தது. அவரது பல கொள்கைகள் தவறாக இருந்தும் எளிதில் தவறென நிரூபிக்கத் தக்கதாக இருந்தும் 17 நூற்றாண்டுகளாக மனித இனத்தின் மனதில் அறிவியல் விளக்கவுரையாக இருந்து வந்தது.

அரிஸ்டோட்டிலின் கொள்கையொன்று உயரத்திலிருந்து இரு பொருட்கள் கீழே போடப்பட்டால் அதிபாரம் கூடியது முதலில் விழும் என்றவாறாக இருந்தது. பின்வந்த கலிலியோ பைசா கோபுரத்திலிருந்து இருவேறு பொருட்களை போட்டு இரண்டும் ஒரே நேரத்திலேயே விழுவதாக காட்டினார்.

பின்னர் நியுட்டனின் கொள்கைகள் உலகை விளக்கத் தொடங்கின. 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐன்ஸ்டினின் சார்பு நிலைக் கொள்கை, விசேட சார்பு நிலைக்கொள்கை, குவாண்டம் கொள்கை என்பவற்றின் மூலம் அறிவியலும் உலகைப் பார்க்கும் விதமும் மாற்றமடைந்துள்ளன.



'வயதில்லா உடலும் காலமில்லா மனமும்' (Ageles body Timeless Mind) என்ற கலாநிதி தீபக் சோப்ராவின் நூலில் உலகில் இதுவரை நம்பப்பட்டு வந்த கொள்கைகள் பத்தினைக் குறிப்பிட்டு அவற்றிற்கு மாற்றாக தற்போதைய புதிய அறிவுக்கேற்ப முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித இனத்தின் பொதுப்பார்வை எம்மைப் பாதிப்பதால் நாமும் அதன்படியே எண்ணி உலகு இப்படித்தான் இருக்கிறது என்று நம்பி வருகிறோம். குவாண்டம் கொள்கைகளை நன்கு அறிந்த விஞ்ஞானிகளும் கூட, ஏற்கனவே இருந்த உலகப் பார்வையில் சிக்குண்டு புதிய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளத் திணறுகிறார்கள் ஏன்? மறுக்கிறார்கள் என்றுகூடச் சொல்லலாம்.

தற்போது வரை உலகில் நம்பப்பட்டும், வழங்கியும் வந்த அறிவியல் நிலைப்பாடுகளாவன,

01. உலகமும், உடலும் பார்ப்பவர்களை சார்ந்திராமல் சுயாதீனமாக இருந்து வருகிறது.

02. உடல், நேரம் (காலம்) அளவுகள் (வெளி) என்பவற்றில் பிரிந்து காணப்படும் மூலப்பொருட்களால் (பருப்பொருட்களால்) ஆனது.

03. மனமும் உடலும் வெவ்வேறான சுயாதீனமுடையவை.

04. பொருளே முதன்மையானது. பிரக்ஞை (சிந்தனை / கருத்து) இரண்டாவது. விளக்கிச் சொன்னால் நாம் சிந்திக்கக் கூடிய இயந்திரங்கள்.

05. எமது சிந்தனை/ பிரக்ஞை Biochemistry (உயிர்ரசாயனவியல்) மூலம் முழுமையாக விளங்கப் படக்கூடியது.

06. நாம் முழுமையான பொருட்கள் தனியர்களாகப் பிரிந்துள்ளோம்.

07. எமது புலன்களைக் கொண்டு இவ்வுலகை சரியாக இருப்பதைப் போன்றே அறியக்கூடியதாகவுள்ளது.

08. காலம் ஆதியானது. நாம் காலத்தின் பிடியில் உள்ளவர்கள். எவரும் காலத்தின் அழிவிலிருந்து தப்பமுடியாது.

09. எமது இயல்பு உடல், மனம், ஆளுமை ஆகியவற்றால் முழுமையாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

10. துன்பம் தேவையானது. அது யதார்த்தத்தின் ஒரு பகுதி நாம் நோய், மூப்பு, இறப்பு ஆகியவற்றின் தவிர்க்க முடியாத பலிக்கடாக்கள்.

மேற்கண்ட பழைய 10 கொள்கைகளும் நவீன கண்டுபிடிப்புக்களுக்கமைய கீழ்வருமாறு விசாலமடைகின்றன. இவையும் கூட மனிதனால் உண்டாக்கப்பட்ட அனுமானங்களே. ஆனால் அவை எமக்கு கூடிய சுதந்திரத்தையும் சக்தியையும் தருகின்றன. எமது உடலிலுள்ள கலங்களை புதிய வழியில் செயற்பட புதிய அணுகுமுறைகளை உண்டு பண்ணுகின்றன.

01. எமது உடலும் இவ்வுலகும் பார்வையாளரின் அனுபவப் பிரதிபலிப்பே எமது உடலையும் உலகையும் நாமே படைக்கிறோம்.

02. எமது உடல் அடிப்படையில் சக்தியும் தகவலும் சேர்ந்த ஒன்றே ஒழிய திடப்பொருள் அல்ல இந்த சக்தியும் தகவலும் அண்டம் பூராகவும் பரவியிருக்கும் சக்தியினதும் தகவலினதும் ஒரு பகுதியே.

03. மனமும் உடலும் பிரிக்க முடியாத ஒன்று. 'நான்' எனும் ஒருமை அனுபவ ஓட்டத்தில் இரண்டாகப் பிரிகிறது. அகநிலை உணர்வாக சிந்தனை உணர்வு, ஆசைகள் உணரப்படுகின்றன. புறநிலை ஓட்டமாக உடல் உணரப்படுகின்றது. ஆழ்நிலையில் இவ்விரு ஓட்டங்களும் ஒரு மூலத்திலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றன. இந்த மூல நிலையில் தான் நாம் வாழவேண்டும்.

04. உடல் சிந்தனை / பிரக்ஞையின் சேதனரசாயனத் தோற்றமே. கலத்தின் உயிர்ப்பை உண்டாக்குவது நம்பிக்கைகள், சிந்தனைகள், உணர்ச்சிகளே. கலத்தின் முடிவு நிலையான மூப்பு என்றென்றும் இளமையாக இருப்பதை பிரக்ஞை மறந்ததினாலேயே ஏற்படும்.



05. உணர்தல் தானாக நிகழும் நிகழ்ச்சி போல் தெரிந்தாலும் உண்மையில் அதுவொரு கற்றறிந்த நிகழ்வு. உடம்பும் உணர்வும் உலகமும் கூட ஒருவன் அதை எப்படி அறியக் கற்றுக்கொண்டான் என்பதைப் பொறுத்ததுதான். உணர்தலை மாற்றினால் உடம்பையும் உலகத்தையும் அறியும் அனுபவம் மாற்றமடையும்.

06. புரிந்துணர்வின் தாக்கம் ஒவ்வொரு வினாடியும் உடம்பை புதிய உருவத்தில் அமைக்கிறது. இவற்றின் கூட்டு மொத்தம் தான் மனிதன். வடிவமைப்பு மாறினால் மனிதனும் மாறுவான்.

07. நாமெல்லாம் வெவ்வேறானவர்களாகவும் சுதந்திரமானவர்களாகவும் தெரிந்தாலும் கூட அண்டம் முழுவதையும் இணைக்கும் வடிவத்தின் ஒரு பகுதியே நாம். எமது உடல் அண்டத்தின் ஒரு பகுதியே; எமது மனம் அண்டத்தின் மனதின் ஒரு சாயலே.

08. நேரம், காலம் என்பதெல்லாம் முழுமையானதல்ல. நிலையான (சாசுவதமான) ஒன்று பரிபூரணமானது. நேரம் அந்த நிலையத்தின் கூறு. காலத்தை துண்டுதுண்டாக்கி செக்கன் மணித்தியாலம் நாள் என நாம் நினைப்பது மாற்றத்தை நாம் உணர்கிறோம் என்பதால் ஏற்படுவது. 'மாற்றமற்ற' நிலையை எம்மால் உணரமுடிந்தால் காலம் என்று நாம் அறிந்து வைத்திருப்பது இல்லாது போய்விடும். மாற்றமின்மை நிலையான தன்மை, முழுமை என்பவற்றை நாம் உண்டாக்கக் கற்றுக்கொள்ளலாம். அப்படி செய்வதன் மூலம் இறப்பற்ற தன்மையில் உடற்தொழில் கூற்றை ஆரம்பிக்கத் தயாராகலாம்.

09. நாமெல்லோரும் மாற்றத்திற்கு அப்பாற்பட்ட ஓர் உண்மை நிலையில் வாழ்கிறோம். உள்ளே ஆழமாக நம் புலன்களுக்குப் புலப்படாமல் ஆதாரமான ஒன்று இருக்கிறது. அதுதான் ஆளுமை (Personality), அகங்காரம் (ego), உடம்பு (Body) ஆகியவற்றை உண்டாக்குகிறது. அதுவே எமது உண்மையான மனம்.

10. நாம் மூப்பு, நோய், மரணத்தின் பிடியில் இருப்பவர்களல்ல இவைகளனைத்தும் காட்சியின் ஒரு பகுதியே தவிர காண்பவனினது பகுதியல்ல. காண்பவன் இவற்றுக்கெல்லாம் விதிவிலக்கானவன். காண்பவன் உள்ளிருக்கும் அழிவற்ற பொருளின் வெளிப்பாடு.

நன்றி – விளக்கு – டிசம்பர் 2001 'விளக்கு' வில் குவாண்டம் பௌதிகமும் மூப்பும் என்ற தலைப்பில் வெளிவந்தது



# பிரமிள் பேட்டி

(வருடாவருடம் ஜனவரி 6ந் திகதி 'பிரமிள்' என்றழைக்கப்படும் தர்முசிவராமு ஞாபகார்த்த உரை திருக்கோணமலையில் நடைபெற்றுவருவது வழமை. இம்முறை சுனாமி அனர்த்தப் பின்னணியால் அவரது 8வது ஆண்டு ஞாபகார்த்த உரை நடைபெறவில்லை)

**கா.சு.:-** மிகவும் ஆழமும் கருத்துச் செறிவும் கொண்ட கவிதைகளை எழுதியிருக்கிறீர்கள். நீங்கள் கவிதை எழுதும்படி தூண்டிய ஆரம்ப உந்துதல்கள் எவை?

**பிரமிள்:-** உயர்நிலைப்பள்ளியில் எனக்கு வயது சுமார் பதினைந்து இருக்கும்போது, தமிழாசிரியர் பெ.பொ. சிவசேகரம், எங்கள் கிளாசிற்கு மிகவும் விசித்திரமான 'ஹோம் ஓர்க்' ஒன்று கொடுத்தார். அப்போது பிரபலமாக இருந்த குழந்தைக் கவிஞர் 'அழ. வள்ளியப்பா' எழுதிய 'பூந்தோட்டம்' என்ற கவிதையைப் படித்து ரசித்துக் காட்டினார். பெ.பொ. சிவசேகரம் 'திருக்கோணமலைக் கவிராயர்' என்ற பெயரில் கவிதைகள் எழுதியவர் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். மரபு மாடலில் தான். 'பூந்தோட்டம் குழந்தைகளுக்கான மரபு மாடல். இதேபோல் எங்கள் ராமகிருஷ்ண மிஷன் ஸ்கூலுக்கு எதிரில் இருந்த பெரிய மைதானத்தைப் பற்றி ஒவ்வொருவரும் கவிதைகள் எழுதிவரவேண்டும் என்பது 'ஹோம் ஓர்க்'. இதை நான் எளிதாக நிறைவேற்றியதுடன் ஒரு வரியும் எழுத வராமல் தவித்த வேறு சில நண்பர்களுக்கும் தனியாக எழுதித் தந்து தங்கள் கவிதைகளாக ஆசிரியரிடம் தரும்படி கொடுத்திருக்கின்றேன். (இவர்களுள் இப்போது சி. சிவசேகரம் என்ற பெயரில் நீங்கள் காணக்கூடிய அன்பர் அடங்கவில்லை. அதே கிளாஸில் அவர் இருந்தார் எனினும்) 'விளையாட்டு' மைதானம் என்ற இந்தக் கவிதைதான் முதன் முதலில் நான் எழுதியது. அதுவரை இயற்கையாகவே ஓவியத்திறன் கொண்டவன் நான் என்பதுதான் என் கணிப்பு. இந்தக் கவிதையுடன் என் புதிய திறன் ஒன்றை நானே கண்டுபிடித்திருக்கிறேன். கவிதையின் எதுகை மோனைச் சொற்களை முதலே தீர்மானித்துவிட்டு இட்டு நிரப்பும் நண்பர் ஒருவரும் கிளாஸில் இருந்தார். அவருக்கு நான் எழுதும் இயல்பான முறை வராததால் என்னை ஒரு விசித்திரப்பிறவியாக எடுத்துக் கொள்வார். ஹோம் ஓர்க்கை படித்த பெ.பொ. சிவசேகரம் தனது கிளாஸில் குட்டி பூதங்கள் நிரம்பியிருப்பதாக கிளாஸிலேயே சொன்னபோது என்னிடம் கவிதை வாங்கி ஹோம் ஓர்க் பண்ணியவர்கள் என்ன நினைத்தார்களோ



அவர்களுக்குத் தலைவலி தீர்ந்தது. எனக்கு பிரசவ வேதனைகள் ஆரம்பித்தன எனலாம். நாலைந்து வருஷங்களுக்குள் 'எழுத்து'வில் 1960ல் என் கட்டுரை வந்தபோது என்சீனியர் மாணவர்கள் அதை நான் எழுதியிருக்க முடியாது என்று பெ.பொ.சிவசேகரத்திடம் கூறியதும், அவர் அதை மறுத்து, "எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கோ?" என்றதும் என் காதுக்கு வந்திருக்கின்றன. இந்த ஆரம்பம் எனது கவிதையின் வடிவம் சம்பந்தப்பட்ட மட்டுக்குத்தான். அனுபவத்தின் ஆழமும் வாழ்வைப் பற்றிய விசாரணைகளுமாக என் கவிதைகள் பொருள் ரீதியான மலர்ச்சி பெற மேலும் ஐந்து ஆண்டுகள் ஆயின. அதுவரை என் ஆரம்பகால எழுத்துக்களில் மரபின் பிரதிபலிப்புக்கள்தான் அதிகம். இருந்தும் அதில் கூட ஒருவித புதுமைத்தொனி இருந்திருக்கிறது. துரதிஷ்டவசமாக அந்தக் கலாகட்டத்துக் கவிதைகளை நான் பாதுகாக்கவில்லை.

**கா.சு:-** உங்களுடைய படைப்பு மனோநிலை பற்றிக் கூறமுடியுமா? படைக்கும்போது உங்கள் மனநிலை என்ன?

**பிரமிள்:-** படைக்கும்போது ஒரு ஒழுங்கமைப்பை நிறைவேற்றும் நோக்கம்தான் என்னால் உணரக்கூடிய என் மனோநிலை. கூடவே சிருஷ்டிகரமான, ஆழ்ந்த கருத்துக்கள் தோன்றும் நிலை. இதுதான் படைப்பியக்கத்தின் முக்கியமான களம். ஆனால் இப்படி கருத்துக்கள் பளீரெனப் பிறக்கும்போது என் மனோநிலை என் அவதானத்துக்கு உட்படுவதில்லை. மீண்டும், இவ்விதம் தோன்றுகின்ற கருத்துக்களை ஒரு ஒருமைப்பாட்டுக்குள் ஒழுங்கமைக்கும் இயக்கமாக மனம் செயல்படும். இதெல்லாம் திருப்திகரமாக நிறைவேறிவிட்டால், முடிவாக ஒருவிதமான சுதந்திர உணர்வு பிறக்கிறது.

**கா.சு:-** எழுத்து மூலம் உண்மையை அடைதல் என்பது பற்றி உங்கள் பார்வை என்ன?

**பிரமிள்:-** உண்மையை அடைவதற்கு ஒரே வழி மௌனம்தான். எல்லா மார்க்கங்களும் அகந்தையின் பரிபூர்ணமான அடக்கத்தை - ஒடுக்கத்தைத்தான் இந்த மௌனத்துக்கு முக்கியமான ஆதாரமாக்குகின்றன. மௌனத்தை இந்திய தியான முறைகள் வெளிப்படையாக வலியுறுத்தலாம். கிறிஸ்துவ தியானமுறை மௌனம் பற்றி ஒன்றும் குறிப்பிடாதிருக்கலாம். ஆனால் அகந்தையின் ஒடுக்கம் பற்றி எல்லா மார்க்கங்களும் ஒருமித்த பார்வையை வெளிப்படுத்துகின்றன.

சரி, எழுதுவது இந்த அகந்தையின் ஒடுக்கத்தைச் சாதித்து விடுமா? ஒண்ணரைக் கவிதையை எழுதி அதை அச்சில் வரப் பார்த்துவிட்ட கவிஞர்களுக்கு அகந்தை எகிறிக் குதிப்பதுதான் தெரிகிறது. பெரிய கவிஞர்களையோ எழுத்தாளர்களையோ எடுத்துக் கொண்டால், அவர்களிடமும் பலரிடத்தில் அகந்தை நாசூக்காகக் கொலுவீற்றிருக்கக் காணலாம். எனவே கவிதை மூலம், எழுத்து மூலம் உண்மையை அடைதல் என்பது எனக்கு அபத்தமான கூற்றாகவே தோன்றுகிறது. ஆனால் எழுதும் போது, நேர்மையும், மன ஓர்மையும் உள்ள ஒருவன் தனது எழுத்தின் மூலம் வெளிப்படுகிறவற்றை - அதாவது தன்னை அவதானிக்க ஒரு சாத்தியம் உண்டு. மனத்தின் களேபரமான ஓட்டத்தைச் சீராக்கும் வேலைக்குக் கூட எழுதுதல் ஒரு சாதனமாகும். (ஒவ்வொருவரும் காலையில் சில பக்கங்கள் எதையாவது எழுதி வருவது அன்றாட மனோவாழ்வைத் தெளிவுபடுத்த உதவும்) இருந்தும் உண்மைத் தேட்டத்தைப் பொறுத்தவரை இது எல்லாம் வெறும் அ, ஆ, தான். மிக மேலோட்டமான பயிற்சிதான்.

நன்றி :- மீறல் - அக்டோபர் 1993

இந்தப் பிரபஞ்சத்தை நாங்களோ எங்களுடைய பாட்டனாரோ படைக்கவில்லை. அதைப் படைத்தவன் இன்னொருவன் இருக்கின்றான். அணிந்திருக்கும் ஆடைகளை நிர்மாணிப்பவரை நேரில் கண்டிருக்காவிட்டாலும் அப்படியொருவர் இருக்கின்றார் என்பதை நம்பித்தான் ஆகவேண்டும். இப் பிரபஞ்சம் சூனியத்திலிருந்து தோன்றவில்லை. இதைப்படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்ற பிரத்தியட்ச ஞானம் உனக்குண்டாகும் பொழுது நீயும் மற்றவர்களும் கர்த்தாக்களல்ல. வெறும் கருவிகளேயென்ற அறிவு வரும். அகங்காரம் ஒழியும். - சுவாமி கெங்காதரானந்தா - ஞான மண்டலம்

அன்றாட வாழ்க்கையில் குறுக்கீடு செய்யும் கோபம் - சினம் - பகை - பொறாமை போன்ற ஜென்ம சத்துருக்களை ஞான விஜாரத்தால் வெல்லுங்கள். கோபம் வரும்பொழுது யாருக்கு இந்தக் கோபம் வந்தது? யாரோடு வந்தது? எதற்கு வந்தது? என்ற விசாரணையால் அதைச் சாந்தப்படுத்துங்கள். அதேபோன்று மற்றெல்லலா மனத் துவேஷங்களையும் ஞான விசாரணையால் ஒடுக்கிச் சாந்தப்படுத்துக!

சுவாமி கெங்காதரானந்தா- வஜனாம்ருதம் -



# எண்ணக் குவியல்

**"மூன்றாம் தலைமுறைக்குச் செல்வோம்"**

1. தமிழும், சமயமும் மூன்றாவது தலைமுறையினருக்கு கொண்டு செல்ல இரண்டாம் தலைமுறையினர் உதவ வேண்டும்.

(முக்கியமாக வெளிநாட்டில் வாழ்பவர்கள்) வீட்டில் தமிழை பேசும் மொழியாக வைக்க வேண்டும். வீட்டு பஜன்கள், கோயிலுக்குச் செல்லல், பிறருக்கு உதவுதல், பெரியோரை மதித்தல் போன்றவை இதனுள் அடங்கும்.

2. 'Amma fund'ன் நிகழ்ச்சிகளில் 2ம் தலைமுறையினர் பங்கேற்றதுபோல் மூன்றாத் தலைமுறையினரும் பங்கேற்று கலைநிகழ்ச்சிகள் படைக்க வேண்டும்.
3. மூன்றாம் தலைமுறையினரின் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தாது விளையாட்டு, புறப்பாட நடவடிக்கைகளில் அதிக ஊக்கம் ஏற்பட இரண்டாம் தலைமுறையினர் உதவ வேண்டும்.
4. 32வது 'Amma fund'ல் (2005 May $25^{th}$) ஒரு தலைமுறை வரைபடம் (Family tree) வெளியிட்டு ஒவ்வொரு வருடமும் Update பண்ண வேண்டும்.
5. இரண்டாம் தலைமுறை அங்கத்தவர்கள் தங்களால் ஆன பண உதவி புரிந்து 'Amma fund' ஒரு சிறந்த நிறுவனமாக உருவாக்க வேண்டும்.

'Amma fund'ஒரு சிறந்த நிறுவனமாக ஆல்போல் தளைத்து, அறுகுபோல் வேரூன்றி பொது மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டும் ஒரு அமைப்பாக உருவாக வேண்மென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகிறோம்

**குணச்சந்திரன் குடும்பத்தினர்,**
**குணன், செந்தில், உமா,**
**டுஷி, அருணன் திவ்யன் சிங்கப்பூர்**

(2004ம் ஆண்டு நடைபெற்ற 31வது ஆண்டுவிழா மலரில் வெளிவந்தது)

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



நூலகம்

# மூன்றாவது சுற்று 'அறிவு'வின் கதை

சந்திர ஞானம் - சந்திரசேகரம் பிள்ளை ஞானாம்பிகை தாபிதத்தின் பெயர் சுருக்கம்.

அந்தச் சுருக்கமே இந்த சஞ்சிகையின் பெயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முன்னர் இது பல ரூபங்களில வெளிவந்துள்ளது. "ஞாபிக் குறிப்புக்கள்" என்பதும் அதில் ஒன்று தினசரி திருக்கோணமலையில் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து லண்டனில் இருக்கும் தம்பி அருட்சோதிச் சந்திரனுக்கு எழுதி வந்தேன். இப்போ ஞாபியின் 30வது ஆண்டுவிழா மலர், 31வது ஆண்டுவிழா மலர் ஆகியவை வெளிவந்தபின் ஒரு மாதாந்த அல்லது காலாண்டு ஏடு வந்தால் என்ன என்று எனது மனதில் தோன்றியது. அதன் பலனே இந்தச் சந்திரஞானம். இதன் முதல் இதழ் 25-01-2005 தைப்பூசத்தன்று வெளிவருகிறது.

இது ஆரம்ப இதழ். இதன் அடுத்த இதழ்கள் எப்படி அமைய வேண்டும் என்பதை ஞாபி அங்கத்தவர்கள் அனைவரும் இந்த ஸ்தாபிதத்தின் நலன்விரும்பிகளும் தீர்மானிக்கப் போகிறீர்கள்.

ஞாபி அங்கத்தவர்களிடையே உறங்கிக் கொண்டிருக்கும் எழுதும் ஆற்றலைத் தூண்டிவிடுவதே இச் சஞ்சிகையின் முக்கிய நோக்கம். எமது அன்றாட நிகழ்வுகள் குறிப்பில்லாத நிலையில் எந்தத் திகதியில் எந்த முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பதை அறிய முயலும் போது ஏற்படும் சிக்கல்களையும் சிரமங்களையும் இது இல்லாது செய்துவிடும்.

'ஞாபியின் குறிக்கோளான சாந்தியும் சுபீட்சமும் "Peace and Prospenty" தான் இந்த சஞ்சிகையின் குறிக்கோள்.

திரு பாலசந்திரன் ஏன் புதுப்பெயரில் சஞ்சிகை நடத்த வேண்டுமெனக் கேட்டு பழைய 'அறிவு' சஞ்சிகையையே நடத்தினால் என்ன என்ற அறிவுரை தந்தார். அப்படியே அமைந்துவிட்டது.

S.P. பிரமச்சந்திரா
(ஆசிரிய குழுவிற்காக)

